திவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: தை 3 (17—1—68) புதன் ★ வெளியூர்: தை 4 (18—1—68) வியாழன் [இதழ்: 179

இந்தி வெறியர்களின் 'மன்னிப்பு ஊர்வலம்'!

மொழிக் கிளர்ச்சியின்போது தனிப்பட்டவர் சொத்துக்கும் பொதுச் சொத்துக்கும் ஏற்பட்ட சேதங்களுக்கு வருத்தம் தெரிவிப்பதற்காக 'இந்தி சாகித்திய பரிஷத்' எனும் உ.பி. அமைப்பு, மாநிலத்தின் பல்வேறு இடங்களிலும் 'மன்னிப்பு ஊர்வலங்கள்' நடத்தும்!

மாணவர்களும் மற்றவர்களும் செய்த காலித்தனத்தால் இந்தியின் நலன் பாதிக்கப்பட்டுள்ளதாக அவ்வமைப்பின் செயலாளர் கூறியுள்ளார்.

முன்னாள் காங்கிரசு அமைச்சர் சேர்த்த சொத்து!

12 ஆண்டுக் காலத்தில் ரூ. 91 இலட்சம்!

மற்றும் ஐந்து அமைச்சர்கள் புரிந்த 'திருவிளையாடல்கள்'!

பாட்னா, சன. 16—

பீகார் மாநிலத்தின் முன்னாள் அமைச்சர்கள் ஆறு பேர் மீது மொத்தம் 192 குற்றச்சாட்டுக்கள் அடங்கிய குற்றப் பத்திரம், 328 பக்கங்களில் 'டைப்' செய்யப்பட்டுள்ளது.

அவர்கள், அதிகாரங்களைத் தவறான வழிகளில் பயன்படுத்தி ஏராளமான சொத்துக்களைத் தமது உடைமையாக்கிக்கொண்டிருக்கின்றனர்; மேற்குறிப்பிட்ட முன்னாள் அமைச்சர்களில் ஒருவர், ரூ. 91 இலட்சத்துக்கு மேல் மதிப்புள்ள சொத்துக்களை 1956 முதல் 1967-ம் ஆண்டுக்கிட்பட்ட காலத்தில் சேர்த்திருக்கிறார்!

இன்னோர் அமைச்சர் பத்தாண்டுக் காலத்தில் ரூ. 17 லட்சம் பெறுமான சொத்துக்களைச் சேர்த்திருக்கிறார்!

இன்னொருவர், ஆண்டுக்காலத்தில் ரூ. 6.5 இலட்சத்துக்கு மேல் சேர்த்திருக்கிறார்!

முன்னாள் அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு குழு ஒன்றை நியமித்து 1967 அக்டோபர் முதல்நாளன்று வெளியிட்ட அறிவிப்பில் திருத்தம் செய்து இன்றிரவு பீகார் அரசு ஓர் அறிவிப்பை வெளியிட்டது.

முன்பு வெளியிட்டிருந்த அறிவிப்புடன் இரண்டு பட்டியல்கள் சேர்க்கப்பட்டுள்ளன; அவற்றில் ஒன்று —மேற்குறிப்பிடப்பட்ட ஆறு அமைச்சர்களின் குடும்பத்தார்—உறவினர்களின் பெயர்களையும், மற்றொன்று—அந்த ஆறு அமைச்சர்களின் மீதும் சாட்டப்பட்டுள்ள குறிப்பிடத்தக்க குற்றச்சாட்டுக்களையும் உள்ளடக்கியுள்ளன.

குழு விசாரணைக்கான காலவரம்பும் மார்ச் 31-ம் நாள் வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

பீகார் அமைச்சரவையின் தனிக் கூட்டமொன்றில், முந்திய அறிவிப்பில் இந்த மாற்றத்தைச் செய்ய முடிவு செய்யப்பட்டது.

மாநில அரசின் நிதித் துறையிலிருந்து தவறான முறையில் அதிகாரத்தைப் பயன்படுத்தி —தவறான காண்டிராக்ட்டுகள் மூலம் ஏராளமான பணத்தைச் சம்பாதித்திருப்பதாகவும், தங்களுக்கு வேண்டியவர்களிடமிருந்து தேவையில்லாமலே பொருள்களை விலைக்கு வாங்கியிருப்பதாகவும், இலஞ்ச ஊழல்களைப் புரிய அதிகாரிகளையும் பயன்படுத்திக் கொண்டதாகவும் முன்னாள் அமைச்சர்கள் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்களை அமைச்சரவைக் கூட்டம் ஏற்றுக்கொண்டது.

இந்தியத் தலைமை நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியான திரு. டி. எல். வெங்கட்ராமய்யர் தலைமையிலான குழு, இந்தக் குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும்.

ஆட்சிக் கவிழ்ப்பு வீரருக்கு ஏற்பட்ட கதி!

பல்கலைக் கழக மாணவரிடை சிக்கித் தத்தளிப்பு!

ஐதராபாத், சன. 16—

உஸ்மானியா பல்கலைக் கழக ஆதரவில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொள்ள வந்த உமாயூன் கபீர் மீது மாணவர்கள் முட்டைகளையும், தக்காளிகளையும் வீசி எதிர்ப்புத் தெரிவித்தனர்.

வங்க மாநிலத்தில் ஐக்கிய முன்னணி அமைச்சரவை கவிழ்க்கப்பட்டதற்கு மூலகாரணமாக இருந்த உமாயூன் கபீருக்குத் தங்களுடைய எதிர்ப்பைக் காட்டவே மாணவர்கள் இந்தச் செயல்களில் ஈடுபட்டனர்.

'சனநாயகத்தைக் கொலை செய்தவரே! துரோகியே! திரும்பிப் போ!' என்று மாணவர்கள் முழக்கமிட்டனர்.

மாணவர்கள் தொடர்ந்து கூச்சலிட்டு, உமாயூன் கபீரை பேசவிடாமல் தடுக்கவே கூட்டத்தையே பல்கலைக் கழக அதிகாரிகள் ரத்து செய்துவிட்டனர்.

நான்கு இருப்புப் பாதைகளை எடுத்துவிட டில்லி முடிவு

தொடர்ந்து நீடிக்கத் தமிழக அரசினர் முயற்சி

சென்னை, சன. 17—

'போதுமான வருமானம் கிடைக்கவில்லை' என்ற காரணம் காட்டி, 'தமிழ் நாட்டில் நான்கு இருப்புப் பாதைகளை எடுத்துவிட வேண்டும்' என்று அண்மையில் மத்திய அரசு முடிவு செய்திருப்பதை தமிழக அரசு பரிசீலனை செய்துவருகிறது.

இவ்விவகாரம் குறித்து சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளர்களின் கருத்துக்களைத் தமிழக அரசு கேட்டிருப்பதாகவும் அவர்களுடைய அறிக்கைகள் கிடைத்தவுடன் மத்திய அரசுடன் மாநில அரசு இப்பிரச்சினை பற்றித் தொடர்புகொள்ளும் என்று அறியப்படுகிறது.

"வருமான அடிப்படையை மட்டும் கருத்தில் கொண்டு இரயில் வண்டிகள் இயக்கப்படவில்லை" என்று அதிகாரிகள் கருத்துக் கொண்டிருக்கின்றனர்.

குறிப்பாக மேட்டுப்பாளையம்—உதகமண்டலம் இரயில் பாதை பயணிகளுக்குப் பெரிதும் பயன்படுவதால், இந்த இரயில்வே தொடரினை வருமான அடிப்படையை மட்டும் கருத்தில் கொண்டு எடுத்துவிடுவது சரியானதல்ல!

மாயூரம்—தரங்கம்பாடி; மேட்டுப்பாளையம்—உதகமண்டலம்; பேரளம்—காரைக்கால்; நீடாமங்களம்—மன்னார்குடி ஆகிய நான்கு இரயில்வே தொடர்புகளை எடுத்துவிட மதிய அரசு முடிவு செய்திருக்கிறது.

மொழிப் பிரச்சினையில் காங்கிரசுத் தலைவரின் நிதானப் போக்கு!

ஐயப்பாடுகளை நீக்குவதற்கு விளக்கம் தந்தால் போதுமாம்!

முதிய தலைவர்களைக் கலந்து பேசப்போகிறாராம்

சென்னை, சன. 17—

"மொழிப் பிரச்சினையில் தென்னாட்டு மக்களிடையே நிலவும் அச்சத்தை நீக்கும்வகையில், முதிய காங்கிரசுத் தலைவர்களோடு விரைவில் விவாதிக்கப்போகிறேன்"

என்று அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் திரு. நிஜலிங்கப்பா கூறினார்.

செய்தியாளர்களிடை அவர் இங்கு பேசுகையில் கூறியதாவது:—

"மொழிச் சட்டத்துடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், தென்னாட்டு மக்கள் மனத்தில் சில ஐயப்பாடுகளைத் தோற்றுவித்திருக்கிறது; இந்த ஐயப்பாடுகளைப் போக்க சில விளக்கங்கள் தேவைப்படுகின்றன."

அவர் மேலும் கூறியதாவது:-

"வடக்கேயுள்ளவர்கள் அமைதியாக இருந்தால், இந்தி, தானே எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படும். தென்னாட்டு மக்களின் உணர்ச்சிகளை வடக்கத்தியர்கள் அறிந்துகொள்ள வேண்டும். அவர்கள் தென்னாட்டு மக்கள் மனத்தில் ஐயப்பாடுகளை உருவாக்காதிருப்பார்களேயானால், இந்தி எல்லோருடைய ஒப்புதலையும்பெற நல் வாய்ப்பு ஏற்படும்."

"மொழிப் பிரச்சினை குறித்து ஆராயக் குழு எதுவும் நியமிக்க இருக்கிறீர்களா?" என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு, திரு. நிஜலிங்கப்பா, அதுபற்றி இன்னும் தாம் முடிவு எதுவும் செய்யவில்லை என்றும், முதலில் முதிய காங்கிரசுத் தலைவர்களுடன் இதுபற் கலந்துரையாட விரும்புவதா பதிலளித்தார்.

நயவஞ்சகர் வலையில் வீழாதீர்!

வன்முறைகளைத் தவிர்த்து கழகஆட்சிக்கு உறுதுணை புரிவீர்!

தமிழக மாணவர்கட்கு அமைச்சர் மதியழகன் வேண்டுகோள்

மதுரை, சன. 16—

"நயவஞ்சக எண்ணத்தோடு, 'தமிழக அரசைக் கவிழ்க்க வேண்டும்' என்ற எண்ணங்கொண்ட கூட்டத்தினரின் வலையில் மாணவர்கள் சிக்கக்கூடாது"

என்று தமிழக உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள், மாணவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

தி. மு. க. அரசு பலவீனப்படுத்தப்பட்டால் தமிழர்களின் நலனில் நாட்டங் கொண்டவர்கள் தமிழ்நாட்டில் வேறு யாரும் இல்லை என்பதை மாணவர்கள் உணர்ந்து வன்முறைச் செயல்களில் ஈடுபடாமல், மொழிப் பிரச்சினையில் தீர்வு காண அரசின் கைகளை வலிவுபடுத்த வேண்டும் என்றும் அவர் மாணவர்களுக்குச் சுட்டிக்காட்டினார்.

• இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாட்டுக்கு வருகை தந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளை வரவேற்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட பொதுக்கூட்டத்தில் இங்கு பேசுகையிலேயே உணவு அமைச்சர் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

தமிழில் தொழிற்கல்வி-தமிழக அரசு நடவடிக்கை

சென்னை, சன. 17—

பாலிடெக்னிக்குகளைச் சேர்ந்த தொழிற்கூடங்களில் படிக்கும் மாணவர்களுக்கு எல்லா பாடங்களையும்—பாட மொழி ஆங்கிலமாக இருந்தாலும் — ஆங்கிலத்தோடு தமிழிலும் சொல்லிக் கொடுக்கவேண்டும் என்று தமிழக அரசு உத்தரவு பிறப்பித்திருப்பதாகத் தெரிகிறது.

ஆங்கிலத்தைத் தமிழ் அகற்றிவிடும் என்பதற்கு இது பொருளாகாது; பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் பாடங்களைத் தமிழில் சொல்லிக் கொடுப்பது எட்டாம் வகுப்புவரை மடித்துவிட்டுப் பயிற்சிகளில் சேரும் மாணவர்களுக்குப் பேருதவியாக இருக்கும் என்றும் கருதப்படுகிறது.

மாநகராட்சிக்கு மாநில அரசின் கடன்

சென்னை, சன. 17—

1967—68-ம் ஆண்டில் சென்னை நகராட்சிக்கு ரூ. 6 இலட்சம் தமிழக அரசு கடனாக வழங்கியிருக்கிறது.

இக்கடன் தொகைகள் மூன்று பிரிவுகளாக்கப்பட்டு, நகரத்திலுள்ள தெரு விளக்குகளை மாற்றியமைத்து நல்ல முறையில விளக்குகள் எரியச் செய்வதற்காகவும், பேசின்பிரிட்ஜ், புதுப்பேட்டை ஆகிய இடங்களில் உள்ள லாரி நிலையங்களை புதுப்பித்துக் கட்டுவதற்காகவும் வழங்கப்பட்டிருக்கிறது.

தமிழக வரலாற்றில் புதுமை!

மொழிப் பிரச்சினையை விவாதிக்கத் தனிச் சட்டமன்றக் கூட்டம்

சென்னை, சன. 17—

சனவரி 23-ம் நாள் கூடவிருக்கின்ற தமிழகச் சட்டமன்றக் கூட்டத்தில் தமிழக அரசின் மொழிக் கொள்கை பற்றியும், தற்போது மொழிப் பிரச்சினை காரணமாக நாட்டில் எழுந்துள்ள நிலைமைகள் பற்றியும் விவாதிக்கப்படும்.

"மொழிக் கொள்கை பற்றிய அரசினர் தீர்மானம் ஒன்று அக்கூட்டத்தில் கொண்டுவரப்படலாம்" என்று, தமிழகப் பொதுப் பணித்துறை அமைச்சர் மு கருணாநிதி, செய்தியாளர்களிடம் பேசுகையில் குறிப்பிட்டார்; இக்கூட்டம், ஒன்று அல்லது இரண்டு நாட்கள் நடைபெறும்

சட்டமன்ற வரலாற்றிலேயே ஒரு குறிப்பிட்ட பிரச்சினைக்காக அவசரக் கூட்டம் கூட்டப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

சென்னையில் நில அதிர்ச்சி

உறுமல் ஓசையுடன் உருவாகியது!

சென்னை, சன. 17—

நேற்று காலை சுமார் 10-மணிக்கு சென்னை மயிலாப்பூர் மற்றும் அடையாற்றைச் சேர்ந்த சில பகுதிகளில் இலேசான நில நடுக்கம் ஏற்பட்டது. மூன்று நிமிடங்களுக்கு ஒரு முறையாக இரண்டு தடவைகள் ஏற்பட்ட இந்த நில நடுக்கம், ஒவ்வொரு முறையும் சுமார் மூன்று அல்லது நான்கு விநாடிகளுக்கு நீடித்தது.

நில நடுக்கத்தின் கூடவே ஓர் உறுமல் ஓசையையும் கேட்க முடிந்தது.

இந்த நில நடுக்கம், தாம்பரத்திலுள்ள காலநிலை அறிவிப்பாளர் அலுவலகத்தில் பதிவாக 'இந்த நில நடுக்கம் மிக சானதுதான்; இது கவலைப்படத் தேவை என்று அங்குள்ள அ தெரிவித்தனர்.

அநீதிக்கு எதிராகக் கொதித்தெழுந்தால்!

'ஹோம்ரூல்' இதழில்
அறிஞர் அண்ணா அவர்கள்
எழுதியுள்ள
தம்பிக்கு மடலில் சில பகுதிகள்

" அநீதி என்பது, குறைந்த காலத்திலேயே அழிந்தொழிந்திட மறுக்கிறது!

" அநீதிக்கு எதிரான போர், கடுமையானதும் எரிதன்மையும் உள்ளது மட்டுமல்ல—நீண்ட நெடுங்காலத்திற்கு நடக்கவேண்டிய போராட்டமாகும்!

" நீண்ட - நெடிய அந்தக் காலத்திற்குப் பிறகுதான், ஒளி உதயமாகிறது!

" மக்கள் கூட்டம் கொடிய இருளிலும், துன்பத்திலும் விரக்தியடைந்து, வழிபாடுகளிலும் நியாயத் தீர்ப்புக்களிலும் நம்பிக்கை இழந்து எழுந்தால், அந்தப் புயலைத் தடுப்பவர் யார்? அந்தக் கூட்டம் வேக நடைபோடும்போது அதை எதிர்த்து நிற்கும் வல்லமை படைத்தோர் யார்?"

உயர்ந்த கோபுரங்கள்-- தாழ்ந்துகிடக்கும் மனித உருவங்கள்!

" தங்கத்தை வழங்கிவிட்டுத் தகரத்தைப் பெற்றிருக்கிறோம்! மதிப்பிலா மாணிக்கங்களை விட்டுவிட்டு வெற்றுக் கூழாங் கற்களை ஏற்றிருக்கிறோம்!

" நமக்கே சொந்தமான தத்துவங்களை—அறநெறிகளை—சமுதாய முறைகளை—அரசியல் சிந்தாந்தங்களைக் கைவிட்டு, மாறாக, ஐயத்திற்கிடமான—பொருளற்ற புனைந்துரைகளை ஏற்றுக் கொண்டுள்ளோம்!

" 'மேல் நோக்கிப் பார்' என்று சொல்லிடும்போதே, 'அடிப்படை வேர்' நம்மைவிட்டு அகன்றுவிடுகிறது!

" வானுலகில் உறைந்திடும் தெய்வங்களை நோக்கிக் கூறப்படும் வழிபாட்டு மந்திரங்களைக் கேட்கிறோம்; அதே நேரத்தில், மண்ணுலகத்து 'மனிதன்' அறியாமை இருளில்—மெலிந்திடுமாறு அனுமதித்துள்ளோம்!

" சொர்க்கத்தில் இருக்கும் கடவுளர்களை நோக்கி உள்ளம் நெக்குருகப் புகழ்மாலை, பாமாலை பாடுகிறோம்; ஆனால், பூவுலகத்து மனிதனின் தரமும் மதிப்பும் அழிந்துவிடுவதை அனுமதித்திடுகிறோம்!

" ஆயிரம் தெய்வங்களை நிறுவினோம்! அந்த முயற்சியில் மனிதனை அவனது இடத்திலிருந்து கீழிறக்கி அவனைச் சிறுமைப் படுத்தியிருக்கிறோம்!

" வானளாவும் கோபுரங்களைச் சமைத்தோம்; ஆனால், பாதாளத்தில் மனிதனை இறக்கினோம்!

" இதிகாசங்கள், புராணங்கள் கண்டோம்; எண்ணற்ற பாடல்கள், கீதங்கள் இயற்றினோம்; அனைத்தும் எதற்காக? கடவுளர்களின் சந்நிதானத்தில் மனிதன் இரண்டறக் கலந்திடுவதற்காக!

" ஆனால் மற்றவர்கள், 'ஒருவனேதான்' என்று நிறைவுற்றிடும்போது, நாம், 'கடவுளர்கள்' என்று பன்மை பேசக் காரணம் என்ன? கருதிப் பார்க்கும் அளவுக்கு உரிய விடையை இதுவரை எவரும் அளித்தாரில்லை! இதனால், மனிதன் இன்று மட்டுமல்ல—நெடுநாட்களாக வைதீகத் தன்மையின் கைப் பாவையாக விளங்கிட்டான்!

' வைதீகப் பழமைக் கோட்டையின்மீது பகுத்தறிவின் வலிவான கரங்கள் இரண்டொரு தலைமுறைகளாக தாக்கத் தொடங்கின! விளைவு, கணிசமான வெற்றியைத் தந்தது! அவற்றுள் ஒன்றுதான் பொங்கல் திருநாளுக்குக் கிடைத்துள்ள அங்கீகாரம்! இன்று பொங்கல் விழா, தனக்குரிய இடத்தைப் பெற்று, தமிழரின் தனியொரு தேசியத் திருநாளாக விளங்கிடுகிறது!"

தமிழென்றால் சுடர்விடும் முகம்!

" தமிழ் மொழியை அடிப்படையாகக் கொண்டு நாம், புதியதொரு ஈடுபாட்டினைக் கொண்டிடவும் புதிய உண்மைகளைக் கண்டிடவும், புதிய மதிப்பீடுகளைச் செய்திடவும் இப்போது புதிய முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

' மேல்நாட்டுப் பாணியில் உடை உடுத்தும் தமிழர்கூட, இன்று அழகுத் தமிழில் உரையாற்றிடுவதையும், தமிழுக்காக உணர்ச்சியோடு வாதிடுவதையும் காண்கிறோம்!

" தமிழுக்குத் தக்கதோர் இடம்—உரியதோர் இடம் தரப்பட வேண்டுமென்று கூறிடும் நேரத்தில், அவன் முகத்தில்தான் எத்துணை ஒளியும் உறுதியும் சுடர் விடுகிறது!

" நமது இலக்கிய மூதாதைகள்—நமது முன்னோடிகள் விட்டுச் சென்ற கருவூலங்களிலிருந்து அவன், இன்று, உணர்வும் உத்வேகமும் ஊக்கமும் பெற்றிடுகிறான்!

" அக்காலத்தில்—அடிநாளில், பூபாகத்தின் மற்றப் பகுதிகளில் மனித வாழ்வு பாலைவனமாக—இலக்கியங்களின் வாடைகூடத் தோன்றாமல் வெறிச்சோடிக் கிடந்த நேரத்தில், இங்கே, அழகு கொழித்திடும்—வளம் செறிந்திடும்—சுவை நிறைந்திடும்—அறிவு குடிகொண்டிடும் அமைப்பில் சிறந்த இலக்கியப் பூஞ்சோலையை புலவர் பெருமக்கள் வளர்த்திருக்கிறார்கள்!

" அந்த இலக்கியச் செல்வங்களை அறிந்து துய்த்து—பூரிப்பும் பெருமையும் அடைந்திட இன்றையத் தமிழ் இளைஞனால் இயலுகிறது! சங்க இலக்கியத்தைத் துய்த்திட ஒரு ஆர்வம் எல்லோரிடத்தும் பெருகிடுவதனை இன்று நான் காண்கிறேன்!

" தமிழகத்து பெரும் புலவர் யாரும் ஷெல்லிக்கும், பைரனுக்கும் தாழ்ந்தவர்களல்லர்—என்று ஒப்பிடும் நிலை காண்கிறோம்!

" தரத்தில்-தன்மையில் உயர்ந்து விளங்கிடுகின்றன என்பதால் மட்டும் நாம், நமது இலக்கியங்களைப் பாராட்ட முற்படுவதில்லை; ஆளும் இளவரசன் முதல் பண்ணை உழும் உழவர் வரை அக்காலத்தே நிகழ்த்திய சாதனைகள் அவை!

" அந்தப் பழங்காலத்தின் தொனியினையும், துவளாத முறுக்கினையும் அந்த இலக்கியங்கள் எதிரொலிக்கின்றன என்பதால், நமது இலக்கியங்களை நாம் கொண்டாடுகிறோம்.

" இத்துறைக்கு தமிழ் பயன் தராது—அத்துறைக்கு தமிழ் தகுதியற்றது — என்றெல்லாம் வீண் பேச்சுப் பேசிடும் காலம் மலையேறிவிட்டது!

" எந்த ஒரு சிந்தனையையும் வெளியிடவும், எந்த ஒரு புதுக் கருத்தினையும் வலியுறுத்தவும், தமிழ் தகுதி பெற்ற மொழி மட்டுமல்ல—'அது, சிறப்பான—பொருத்தமுடைய மொழி' என்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது!

" இத்தனைக்குப் பிறகும், ஐயப்பாடுகளை எழுப்பிடும் சிலரையும், 'தமிழுக்குத் தரப்படவேண்டிய இடங்குறித்து ஏன் இந்த அளவு வலியுறுத்துகிறீர்கள்' என்று வினாக் குறி எழுப்புவோரையும் காண்கிறேன்!

" இவ்வாறு பேசிடுவோர்—இத்தகைய கோலம் கொண்டிருப்போர், 'மொழிப் பிரச்சினை, பலதரப்பட்ட உலக நாடுகளில் எத்தகைய எழுச்சி பெற்றிருக்கிறது என்பதை உணராதோர்–உணர மறுப்போர்' என்றே நான் கருதுகிறேன்!"

மனிதனின் மதிப்பை உயர்த்திட சூளுரைக்கும் நன்னாள்

" தம்பி! நான் உனக்கு சிந்தனைக்கு உணவு தந்திடுகிறேன்! அந்த உணவை நீ சுவைப்பாய் என்று நம்புகிறேன்!

" அது மட்டுமல்ல — நான், உன்னிடம் எதிர்பார்ப்பது — தவறைச் சரிசெய்ய நீ முன்வர வேண்டும்; இடுக்கண்ணுற்ற இனத்திற்கு நீ துணைவனாக வேண்டும்; ஏழையை நீ பாதுகாக்க வேண்டும்; வக்கற்ற நிலையிலுள்ளோருக்கு நீ வாதாட வேண்டும், சுருக்கிச் சொல்வதானால், நீ மனித கவுரவத்திற்கு உனது பணியை ஆற்ற வேண்டும்!

" மறுமலர்ச்சி — பகுத்தறிவு—சமதர்மம்—இந்த மூன்று பரப்பில் நின்று, நீ உனது கடமையை–தலையாய கடமையை ஆற்ற வேண்டும்!

" பொங்கல் நாள் பிரார்த்தனை நால் அல்ல; 'மனிதனின் மதிப்பை உயர்த்துவது' என்ற உன்னதக் குறிக்கோளுக்கு மீண்டும் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும் நாள் ஆகும்!

" ஆட்சி, நிர்வாகப் பொறுப்பு எனும் பெரும் சுமையை ஏற்றுக் கொண்ட பிறகு தமிழை அரியாசனம் ஏற்றுதல்—பகுத்தறிவு—சமதர்மம் ஆகிய உயரிய குறிக்கோள்களை நிறைவேற்ற உன்னைத் தவிர யாரை நான் அழைப்பது!

" தமிழ் மொழியில் — சங்க காலத் தமிழ் இலக்கியங்களில் இந்த உயர் கொள்கைகள் பற்றிக் கருத்துக் கருவூலங்கள் உள்ளன! நீதான் இந்தக் கொள்கைகளுக்கு ஆதரவு தேடத் தகுதியானவன்!

" வாழ்த்துகிறேன் — தம்பி — வாழ்த்துகிறேன்; என் வாழ்த்துக்களை ஏற்றுக்கொள்! உன்னை நெஞ்சாரத் தழுவுகிறேன்!

" நாமிருவரும் கைகோர்த்துச் செல்வோம் — மனித கவுரவத்தை மீண்டும் அரியணை ஏற்ற—அதன் மூலம் மனித குலத்திற்கு உழைக்க!

" மேலும் ஒரு விடுமுறை, 'நாள்' எனும் கணக்கில் வருவதல்ல பொங்கல் நாள்—இது தமிழகத்தின் நாள் — உதய சூரியன் எழும் நிலம் நோக்கி நடப்போம் வா!"

இனக் கலவரம் மூளுமா?

சமாளிக்க அமெரிக்காவில் முன்னேற்பாடு

வாஷிங்டன், சன. 17—
வருகிற கோடையில் நடைபெறக்கூடிய இனக் கலவரங்களை எப்படிச் சமாளிப்பது என்பது பற்றி ஆலோசிக்க அமெரிக்காவின் முக்கிய நகரங்களைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட போலீசுத் தலைமை அதிகாரிகளும், மேயர்களும், இன்னும் சில நாட்களில் இரகசிய மாநாடு நடத்துவர். பெடரல் நீதித்துறை இதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

இவ்வாண்டுக் கோடையில், 'தெருக்களில் பெரும் போர்' நடக்குமென்று எதிர்பார்ப்பதாக ரிச்சார்ட் நிக்சன் போன்ற எதிர்க்கட்சித் தலைவர்கள் கூறிவருகின்றனர்.

ஜான்சன் நிர்வாகம் அப்படியெல்லாம் பெரும் கவலை தெரிவிக்காவிட்டாலும், அமைதிக் குலைவு ஆபத்துக் குறித்து பெரும் கவனம் செலுத்துவதை இம் மாநாடு காட்டுகிறது!

மாணவர்களை ஏமாற்றினார் ஷேக் அப்துல்லா!

புதுடில்லி, சன. 17—
டில்லிப் பல்கலைக் கழகத்தை சேர்ந்த ஸ்டீபன் கல்லூரியில் பே[illegible] விருந்த ஷேக் அப்துல்லாவுக்[illegible] எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கல்லூரி வாயிலில் பல மாணவ[illegible]கள் கறுப்புக் கொடிகளுடன் கா[illegible] திருந்தனர்; ஆனால் ஷேக் அப்துல்லா, உரையாற்ற வராமலிருந்துவிடவே, மாணவர்கள் ஏமாற்றத்துக்குள்ளாயினர்!

ஸ்டீபன் கல்லூரியில் பிற்பகல் மூன்று மணிக்கு ஷேக் அப்துல்லா பேசுவதற்கான கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது; ஆனால் அவர் வராததால், கூட்டம் ரத்து செய்யப்பட்டுவிட்டது. அவர் வராமல் போனதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை.

மாணவர்களின் ஆதரவைப் பெறுவதற்காக ஷேக் அப்துல்லா, கல்லூரிகளில் உரையாற்றும் முயற்சிகளில் ஈடுபட்டு வருவதா[illegible]கக் கூறப்படுகிறது.

இந்திய கண்டிராச[illegible] விலை உயர்வு!

சென்ற ஆண்டில் ஏற்பட்டது

இந்தியாவில் 1967-ம் ஆண்டு விலைவாசி புள்ளி 15 விழுக்காடு உயர்ந்திருக்கிறது; ஓராண்டில் இப்படிப்பட்ட உயர்வு ஏற்பட்டதே இல்லை!

1965-ம் ஆண்டில் இந்த விலைவாசி 8.7 விழுக்காடும், 1966-ல் 13.7 விழுக்காடும், 1967-ம் ஆண்டில் 16.3 விழுக்காடும் உயர்ந்திருக்கிறது.

ஆக்கப் பணிகளில் சிறைக் கைதிகள்!

மராட்டிய மாநிலஅரசின் திட்டம்

ஆயுட் கைதிகள் நல்ல வாழ்க்கையை நடத்த ஊக்குவிப்பதற்காக இங்கிருந்து 160 மைல் தொலைவிலுள்ள 'பைத்தான்' என்னுமிடத்தில், மகாராட்டிர அரசு திறந்தவெளிச் சிறையை அமைக்கும்!

அங்கு சிறையிருக்கும் கைதிகள் [illegible]தாவரித் திட்டத்தில் வேலை[illegible]ய அனுப்பப்படுவர்; அங்கு [illegible] பெரிய அணை கட்டப்பட்டு[illegible]து.

[illegible]லில் 1,500 கைதிகளுக்கும் [illegible]னவர்கள் அங்கு அனுப் [illegible] என்றும், அவர்கள், [illegible]ற்கு உழைப்பதற்காக முகாம்களில் வைக்கப்படுவர் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

அத்திட்டத்தில் பணியாற்றுகையில் நல்ல முறையில் நடந்து கொள்பவர்களுக்கும், அதிகாரிகளுடன் ஒத்துழைப்பவர்களுக்கும் தண்டனையில் பாதியைக் குறைப்பதென்று மாநில அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

அவர்கள் தண்டனைக் காலத்தில் நடந்துகொண்ட நடத்தையை வைத்துத்தான் மேற்சொன்ன திட்டத்தில் பணியாற்றத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் என்றும் தெரிகிறது.

கைதிகள் மாநில நீர்ப்பாசன—மின்விசைத் துறையின்கீழ் வேலை செய்யும்போது, ஓரளவு கண்காணிக்கப்படுவர்.

இலங்கையிலிருந்து திரும்பும் தமிழர்

ஒப்பந்த நடைமுறையில்சிக்கல்?

புதுடில்லி, சன. 16—
இலங்கையிலிருந்து சனவரி அல்லது பிப்ரவரித் திங்களில் வருவதாக எதிர்பார்க்கப்பட்ட இலங்கைத் தமிழர்கள், இந்த ஆண்டு மத்தியில்தான் வருவார்கள் எனத் தெரிகிறது.

5,25,00 நாடற்ற இலங்கைத் தமிழர்களை இந்தியாவுக்குத் திரும்ப அழைத்துக்கொள்வதாக இலங்கை—இந்திய அரசுகளின் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இவ்விவகாரம் அடங்கிய இலங்கை—இந்திய ஒப்பந்த மசோதா இலங்கை அரசினரால் நிறைவேற்றப்பட்டுவிட்டாலும், இச்சட்டத்தின் நடைமுறைகளைச் செயல்படுத்தும் தன்மைகள் ஆகியவை பற்றிய பிரச்சினைகள், இத்திங்களில் கூடுகின்ற இலங்கை நாடாளுமன்றக் கூட்டத்தின் பரிசீலனைக்கு வைக்கப்படவிருக்கிறது.

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்ப வரவிருக்கின்ற முதல் குழு, இலங்கை நாடாளுமன்றத்தினரால் ஒப்புதல் அளிக்கப்படுகின்ற இச்சட்ட நடைமுறைகளுக்காக எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

பொங்கல் விழா

சென்னை 81-வது வட்ட[illegible] முத்தமிழ் மன்றம்

சென்னை 81-வது வட்டம் மு[illegible]தமிழ் மன்றத்தின் சார்பி[illegible] 15—1—68 காலை 9-மணியளவ[illegible] முத்தமிழ் மன்றப் பணிமனை[illegible]யைத் திருநாளை (பொங்கல் விழ[illegible]) முன்னிட்டுக் கழகக் கொடியேற்[illegible] வைத்துச் சிறுவர்களுக்கு இனிப்[illegible] வழங்கப்பட்டது. திரு. கே. என்[illegible] இராசமாணிக்கம் தலைமைதாங்கினார்; திரு. மோகன்தாஸ் கொ[illegible]யேற்றினார்; நடிகர் திரு. வளையபதி முத்துக்கிருட்டினன், மற்று[illegible] தோழர்கள் பலர் பேசினர்.

தமிழரின் பண்பாட்டில் ஒன்றிவிட்ட மலர் மணம்

மனதுக்கும் உடலுக்கும் நலம் பயக்கும்

தோட்டக் கலைக்காட்சித் துவக்கவிழாவில் முதலமைச்சர் அண்ணா

சென்னை, சன. 16—

மலர்களைப் பற்றிய விரிவான வர்ணனை இல்லாத தமிழ் இலக்கியங்களே இல்லை; தொன்று தொட்டே நமது வாழ்வு மலர்களுடன் பின்னிப் பிணைந்து வந்திருக்கிறது!

"மலர்கள் நமக்குப் பலவிதங்களில் பயன்படுகின்றன; நாள்தோறும் பெண்கள் மலர் சூடுகிறார்கள்; புனித காரியங்களுக்கு அவற்றைப் பயன்படுத்துகிறோம்; அழகும் வர்ணமும் மட்டுமன்றி, மணமும் அளிக்கிறது மலர்; மனத்துக்கு மகிழ்ச்சி அளிப்பதோடு மட்டுமன்றி உடலுக்கு நலனையும் மலர்கள் அளிக்கின்றன!

"போர் முறையிலும்கூட மலர்களுக்குப் பயன் இருந்துவந்தது; போர் வீரர்கள் முன்னேறும்போது ஒரு மலர்—முற்றுகையிடும்போது ஒரு மலர்—வெற்றி வீரர்களாகத் திரும்பும்போது ஒரு மலர்—என்று, இப்படிச் சந்தர்ப்பத்துக்கு ஏற்ற வகையில் வித விதமான மலர்களை அணிந்து வந்திருப்பதாக நூல்களில் படித்திருக்கிறோம்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், தோட்டக் கலைச் சங்கம் நடத்தும் மலர்—காய்–கனிகள் காட்சியைத் துவக்கிவைத்துப் பேசுகையில் சுட்டிக்காட்டி விளக்கினார். அவர் மேலும் கூறியதாவது:—

"நாள்தோறும், குறைந்தது ஒரு ரோஜா மாலையாவது என் கழுத்தில் வந்து விழுகிறது என்பதை நினைத்துப் பார்க்கும்போது, மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது; ஆனால், அந்த மகிழ்ச்சி வெகு நேரம் நீடிப்பதில்லை; ஏனெனில் ஒரு நிமிடம் கழித்துப் பார்த்தால் அந்த மாலை எங்கே போயிற்று என்றே தெரிவதில்லை!

தோட்டக் கலைச் சங்கத்துக்கு அரசு அதிக மானிய உதவி அளிக்க முடியுமா என்பது குறித்துக் கவனிப்பதாக உறுதி கூறுகிறேன்."

தோட்டக் கலைச் சங்கத்தின் செயலாளர் திரு. சி.எஸ். கிருஷ்ணசாமியின் பெயரில் அமைக்கப்பட்டுள்ள ஒரு பகுதியை முதலமைச்சர் திறந்துவைத்தார்.

விழாவுக்கு விவசாயத் துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி தலைமைதாங்கினார்; 100 சதுர அடி நிலத்தில் வேளாண்மைத்துறை பயிரிடவிருக்கும் காய்கறித் தோட்டத்தை அவர் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"வீடுகளில் காய்கறிச் செடிகள் பயிரிடுவதில் படித்த பெண்கள் மற்றவர்களுக்கு வழிகாட்டிகளாக விளங்க வேண்டும்."

சேலம் 8-வது வட்ட தி.மு.க. பொதுக்கூட்டம்

சேலம் 8-வது வட்ட தி.மு.க. சார்பில் 31—12—67-ல் தோழர் த. சுந்தரம் தலைமையில், சங்கரி வெற்றி விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் க. அன்பரசு, க. இராசாராம் பி.ஏ., எம்.பி., ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.எல்.ஏ., ச. அழகரசன், ஆ. சின்னையன், தண்டபாணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

நம் உணவில் மூன்றில் ஒரு பாகம் சேதமாகிறது—அழுகும் பண்டங்களைப் பாதுகாக்காவிடில் உணவுப் பிரச்சனை மேலும் தீவிரமாகும்.

சரியான 'பாக்கிங்' முறை மூலம் இச் சேதத்தைத் தடுக்கலாம்

காய்கறிகள், பழங்கள், மீன், இறைச்சி, பால் பொருட்கள் இவையே விரைவில் சேதமடைந்து உபயோகிக்க இயலாமல் போகின்றன. அதன் காரணங்கள் பல.

அவைகளை உற்பத்தி செய்யுமிடங்களிலிருந்து தொலை தூரத்தில் இருக்கும் சந்தைகளுக்குக் கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. வழியில் பல்வேறு வெப்பநிலைகளால் பாதிக்கப்படுவதால் விற்பனை இடத்தையடையும் தருணத்தில் அவை நல்ல நிலையில் இருப்பதில்லை. இவற்றைப் பதமாக வைக்க ஏற்ற குளிர்ச்சாதன வசதிகளோ மற்ற வசதிகளோ இல்லாமையே இதன் காரணம். இந்நிலையில் இவற்றுக்குப் பாதுகாப்பளிக்கும் ஒரே வழி சிறந்த 'பாக்கிங்' முறையே.

விஞ்ஞான முறையில் பதப்படுத்தி 'பாக்' செய்தால் இப் பொருள்கள் சேதமடைவதைத் தவிர்க்க முடியும். மேலும், பெரும் அளவில் நாட்டில் எல்லா இடங்களுக்கும் கொண்டு செல்லவும் 'பாக்' செய்யப்பட்ட பொருள்கள் வசதியானவை.

நாட்டின் உணவு சேதமாவதைத் தடுக்க மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தினர் எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம் விஞ்ஞான முறையில் பதப்படுத்தும் முறைகளை அளிக்கிறார்கள். உணவுப் பொருட்களைச் சோதிப்பது, அவற்றுக்கேற்ற 'பாக்கிங்' முறைகளை சிபாரிசு செய்வது. உதாரணமாக, வெவ்வேறு மாதிரியான தகர டின்களிலும், மற்றும் வெளிநாடுகளிலிருந்து அறிந்து வந்த தொழில் நுட்பத்துடன் கூடிய சிறந்த 'பாக்கிங்'முறைகளையும் அளிப்பது இவையெல்லாம் இவ் வசதிகளில் அடங்கியவை.

இந்தியாவில் உள்ள 9 நிறுவனங்கள் மூலமும் மெட்டல் பாக்ஸ் கம்பெனியார், உணவுச் சேதத்தை தடுக்க உதவுகின்றனர். இப்போதைய உணவுப் பற்றுக் குறை நிலையில் எங்கள் பணி மிகவும் சிறியது என்பதை நாங்கள் அறிவோம். ஆயினும் இச் சமயத்தில் சிறு துளியும் பெரு வெள்ளமாக உதவும் என்ற நம்பிக்கையே மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உதவுகிறது.

MB

மெட்டல் பாக்ஸ்

பாதுகாப்பான பாக்கிங்

MB/4101

'டால்மியாபுரம்' பெயர் மாற்றக் கோரிக்கை

பொருந்தாக் காரணம் கூறித் தட்டிக் கழிக்கிறது டில்லி!

தமிழக அரசின் விடா முயற்சி— அமைச்சர் மு. கருணாநிதி விளக்கம்

சென்னை, சன. 17—

டால்மியாபுரம் இரயில் நிலையத்தின் பெயரை, 'கல்லக்குடி' என்று மாற்றவேண்டும் என மத்திய அரசைத் தமிழக அரசு மீண்டும் வற்புறுத்தியிருக்கிறது.

கடந்த ஓராண்டுக் காலமாக இது குறித்து மத்திய அரசுடனும்—இரயில்வே போர்டாருடனும் தொடர்பு கொண்டிருப்பதாகத் தமிழகப் பொதுப்பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் 'கள்ளிக்குடி' என்ற ஓர் இரயில்வே நிலையம் இருப்பதால், 'கல்லக்குடி' என்று டால்மியாபுரத்தின் பெயரை மாற்றுவது பயணிகளிடம் குழப்பத்தை விளைவிக்கும் என்றும், டால்மியாபுரம் என்ற பெயரே பழகிப் போயிருப்பதாகவும், அதனால் அப்பெயரை மாற்றவேண்டாம் என்றும் மத்திய அரசு கூறி இக்கோரிக்கையைத் தட்டிக்கழித்து வருவதாக அமைச்சர் கூறினார்.

இம்மாநிலத்தில் ஒரே பெயருடைய பல்வேறு ஊர்கள் இருக்கின்றன என்றும், அதனால் எத்தகைய குழப்பமும் ஏற்படாது எனவும் மத்திய அரசுக்குத் தமிழக அரசு தெரிவித்திருப்பதாக அமைச்சர் சொன்னார்.

'கல்லக்குடி இரயில் நிலையம்' எனப் பெயரிட்டு, 'டால்மியா சிமெண்டுத் தொழிற்சாலைக்குச் செல்பவர்கள் இங்கு இறங்கவும்' என்ற அறிவிப்புப் பலகை ஒன்றை இரயில்வே பிளாட்பாரத்தில் தொங்கவிட்டால் போதும் என்று மத்திய அரசுக்கு மாநில அரசு தெரிவித்திருக்கிறது என்றும் அவர் சொன்னார்.

மாநகராட்சி— நகராட்சித் தேர்தல்கள்

சென்னை, சன. 17—

தமிழகத்திலுள்ள 84 நகராட்சி மன்றங்களின் தேர்தல்களை ஜூன் திங்கள் இறுதியிலோ ஜூலைத் திங்கள் முதல் வாரத்திலோ நடத்தவேண்டும் என்று தமிழக அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

சென்னை மாநகராட்சிமன்றத் தேர்தல் மே திங்கள் கடைசி வாரத்தில் நடைபெறும் என்று அறியப்படுகிறது.

உலகத் தமிழ் மாநாடு, அனைத்து நாட்டுப் பொருட்காட்சி, சட்டமன்ற நிதிநிலைக் கூட்டத் தொடர் ஆகியவைகளின் காரணமாகத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படவேண்டும் என்று தமிழக அரசுக்கு வந்துள்ள கோரிக்கையின் பேரிலேயே, பிப்ரவரியில் நடைபெறுவதாக இருந்த நகராட்சித் தேர்தல்கள் தள்ளிவைக்கப்பட்டிருக்கின்றன.

இதன் காரணமாக, மார்ச் முதல் நாள் முடிவடையும் நகராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக் காலத்தை ஜூன் 20-ம் நாள் வரையிலும், மே முதல் நாள் முடிவடையும் மாநகராட்சிமன்ற உறுப்பினர்களின் பதவிக் காலத்தை மே 25-ந்தேதி வரையிலும் தமிழக அரசு நீட்டித்திருக்கிறது.

இத்தகவலை செய்தியாளர்களிடம் பேசுகையில் தமிழக உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி தெரிவித்தார்.

62-வது பார்க்பேர் பொருட்காட்சி

எஸ். ஐ. ஏ. ஏ. மைதானம் — சென்னை-3

18—1—68 வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு

ரேக்ளா பந்தயம் நடைபெறும்

(இன்று கடைசி நாள்)

மாலை 6-30 மணிக்கு

மலர்மன்னன் தியேட்டர்ஸ் அளிக்கும்
குமரிமன்னன் கலைக்குழுவினர் நடிக்கும்

'சிரிக்காதே'

என்கிற நகைச்சுவை நாடகம் நடைபெறும்

எழுதியது: பி. வி. பதி

கட்டணம்: ரூ. 3, 2, 1, 50 காசு

தி.மு.க.-வின் 18 ஆண்டுச் சாதனையைக் காணத் தவறாதீர்

20—1—68 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய—நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி நடிக்கும் 'ஓர் இரவு' நாடகம் நடைபெறும்.

கே. கோவிந்தசாமி, எம்.சி.
அமைப்பாளர்

முதலமைச்சர் அண்ணா முயற்சி வெற்றி

துறைமுகத் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்

சென்னை, சன. 16—

கடந்த ஒன்பது நாட்களாக நடைபெற்றுவந்த துறைமுகத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களின் வேண்டுகோளைத் தொடர்ந்து, திரும்பப் பெறப்பட்டது.

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த துறைமுகத் தொழிலாளர்களின் கோரிக்கைகள் பரிசீலனை செய்வதற்கான சில யோசனைகள் அடங்கிய கடிதம் ஒன்றை, மத்திய தொழிலாளர் நல அமைச்சருக்கு நாடாளுமன்ற கழக உறுப்பினர் திரு. இரா. செழியன் அவர்கள் மூலம் தமிழக முதலமைச்சர் அனுப்பியிருந்தார்.

மத்திய அமைச்சரவையின் போக்குவரத்துத் துறையின் குழுக்கூட்டத்தில், முதலமைச்சர் அண்ணா அவர்களிடமிருந்து இரா. செழியன் கொண்டுசென்ற கடிதம் பற்றி விவாதிக்கப்பட்டது. கூட்டத்தில் செய்யப்பட்ட முடிவைத் தெரிவிக்கும் கடிதம் இரா. செழியனிடம் தரப்பட்டது.

ஆமதாபாத்—மணி நகரில் கலை நிகழ்ச்சி

21—1—68 மாலை 4-மணிக்கு ஆமதாபாத்—மணி நகர் தி.மு.க. வளர்ச்சி நிதிக் குழுச் சார்பில் கோக்ரா ரோகித் ஆலை அருகில்—வே. இராசு தலைமையில் மதுரை கண்ணம்மா—தங்கராசு குழுவினரின் 'நமது சாதனை' எனும் இன்னிசைக் கலை நிகழ்ச்சி நடைபெறும்; வரவேற்பு: வை. ஆறுமுகம்; பேசுவோர்: அ. குப்புசாமி, ச. சந்திரன்; நன்கொடை: ஆண்கள் ரூ. 1; பெண்கள் 50 காசுகள்.

[தி]ராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை—13) [அச்]சிட்டு வெளியிடப்படுகிறது.

இந்தி எதிர்ப்பா— கழக ஆட்சியைக் கவிழ்க்கும் சதியா?

மாணவர்களைத் திசை திருப்பிவிடும் காங்கிரசு சூழ்ச்சிக்குப் பலியாகாதீர்!

புதுக் கல்லூரி தி. மா. மு. க. கிளையின் வேண்டுகோள்

சென்னைப் புதுக் கல்லூரி திராவிட மாணவர் முனனேற்றக் கழகக் கிளையின் சார்பில், அதன் தலைவர் முத்து ஜா, செயலாளர் புகாரி, காயல் மீரா ஆகியோர் பின்வருமாறு அறிவிக்கின்றனர் :—

"சனவரித் திங்கள் 5-ம் நாள் தமிழகக் கல்லூரி மாணவர்களின் பிரதிநிதிகள் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களைச் சந்தித்து, மொழிப் பிரச்சினையைப் பற்றி நீண்ட நேரம் விவாதித்த பின்னர், மொழிப் பிரச்சினையை அரசிடமே ஒப்படைப்பதென்றும், மாணவர்கள் போராட்டத்தில் கலந்துகொள்வதில்லை என்றும் உறுதியளித்தது தெரிந்ததே.

'இரு மொழிக் கொள்கையைத்தான் கழக அரசு கடைசி வரை கடைபிடித்திடும்' என முதலமைச்சர் உறுதியுடன் சொல்லியும், சில காங்கிரசு மாணவர்களும், குழப்பவாதிகளும், 'அண்ணா, மும்மொழித் திட்டத்தை ஆதரித்துப் பேசினார்' என்று வீண் வதந்தியை மாணவர்களிடையே பரப்பி விட்டனர். அதன் அடிப்படையில் சில காங்கிரசு மாணவர்கள் — அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு— மற்ற மாணவர்களைத் திசை திருப்பிவிட முயன்றனர்.

அந்த வதந்தியை நம்பித்தான் சென்னை நகரமே அமைதியாக இருக்கும்போது, 13—1—68 அன்று காங்கிரசு மாணவர்களின் தூண்டுதலால் குழப்பமடைந்த புதுக் கல்லூரி மாணவாகளில் சிலர் 'இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி' என்று சொல்லிக்கொண்டு கழக அரசுக்குக் கேடு விளைவிக்கவும், அதன் புகழுக்கு மாசு கற்பிக்கவும் முற்பட்டு ஊர்வலமாகச் சென்றனர்.

சுமார் இரண்டாயிரம் பேர் பயிலும் புதுக் கல்லூரியைச் சேர்ந்த முன்னூறு மாணவர்கள் மட்டும் இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். அந்தச் சிறுபான்மையினர்— காங்கிரசு மாணவர்கள், குழப்பவாதிகள் மட்டுமே ஊர்வலம் புறப்பட்டு, மவுண்ட் ரோடு ரவுண்டானாவை அடைந்தனர். அங்கு முதலமைச்சர் அண்ணா அவர்களின் சிலையைச் சேதப்படுத்தவும் முயன்றனர்; மேலும், அரசு பஸ்களில் ஏறிக் கலவரம் செய்தனர். மொத்தத்தில் அது இந்தி எதிர்ப்பாக இல்லாது, கழகத்தை எதிர்த்தும், தலைவர்களைத் திட்டியும் காங்கிரசு மாணவர்கள் செய்த அட்டூழியமாகவே அமைந்தது.

கிளர்ச்சி நடந்த அன்று இரவே உண்மை நிலையை அறிய முதலமைச்சரை, நாங்கள் மூவரும் சந்தித்தோம். மும்மொழிக் கொள்கையைத் தாம் ஆதரித்ததாகச் சொல்வது முழுப் பொய் என்றும் அது சதிகாரர்கள் திட்டமிட்டுப் பரப்பிய வதந்தியாகும் என்றும், இரு மொழிக் கொள்கைதான் தமிழக அரசின் முடிவான —தெளிவான—நிலையான கொள்கை என்றும் அண்ணா அவர்கள் உறுதிப்படுத்தினார்கள்: 'அந்தக் கொள்கையைக் கொண்டுதான், மாணவர்களின் சார்பாகத் தமிழக அரசு இந்தியை எதிர்த்து மத்திய அரசுடன் போராடும்' என்றும் மாணவர்களுக்கு உறுதியளித்துள்ளார்.

எனவே, படிப்பைக் கெடுத்துப் பாழும் கிணற்றில் தள்ளமுயலும் காங்கிரசு மாணவர்களின் வலையில் சிக்காமலும், அவர்களின் திசை திருப்புதலுக்கு ஆளாகாமலும், அரசைக் கவிழ்க்க அவர்கள் புரியும் செயல்களுக்கு துணை நிற்காமலும் 'அரசின் மூலமாகவே மொழிப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள மாணவர்கள் ஒத்துழைத்து, ஆக்கப் பணியில் ஈடுபடுவோம்' என அன்பு அழைப்பு விடுத்து மாணவ நண்பர்களை விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்."

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

18--1--68

பழைய செயங்கொண்ட சோழபுரம்

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு மாரியம்மன் கோயில் முன்னிலையில்; தலைவர்; ஏ. இராமசாமி; பேசுவோர்: பெ. சௌந்தரபாண்டியன் எம்.ஏ., பி.எல்.,எம்.எல்.ஏ., கு. வீ. முத்துசாமி, எஸ். என். நல்லுசாமி, பரமத்தி சண்முகம், ஏ. இராசு, மற்றும் பலர்.

ஈரோடு

13-வது வட்ட தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு சூரம்பட்டு நாலு ரோடில்; தலைவர்: திருமதி டாக்டர் சேதுபாஸ்கரன்; பேசுவோர்: தமிழரசி பி.ஏ., மு. சின்னசாமி எம்.எல்.ஏ., ப. ச. விசுவநாதன், மா. சுப்பிரமணியம் பி.ஏ.,பி.எல்., செ. அரங்கராசன், ஈ. ஆர். குமாரசாமி, எம். இராமசாமி.

வாளவந்தான்கோட்டை

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு, தலைவர்: பொ. கமலதாசன்; பேசுவோர்: சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ., வி. எம். கணேசன், கு. காமாட்சி, ஆர். அன்புராசன்.

இராசக்காபட்டி

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 7-மணிக்கு; தலைவர், க. வே. வி. இராசன்: பேசுவோர்: நெல்லை ஆ. திராவிடமணி, பொன் சீனிவாசன், ப. சுந்தரம்.

திருவில்லிபுத்தூர்

தி. மு. க. சாபில், மாலை 7-மணிக்கு; தலைவர்: வெ. பரமசிவன்; பேசுவோர்: ஆ. திராவிடமணி, ச. அமுதன் பி.ஏ. ஆர். கே. துரை நாரணன், எஸ். டி. கொழுந்து, க. மணிமாறன், த. அதிவீரபாண்டியன் மற்றும் பலர்.

19--1--68

கடலூர்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு; தலைவர்: து. இலட்சுமணன்; பேசுவோர்: இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ., வெ. கிருஷ்ணமூர்த்தி எம்.பி. அமுதா ராகவன், எஸ். சுந்தரம் சி. கோவிந்தராசன், மற்றும் பலர்.

பெங்களூர்—சீராமபுரம்

சாய்பாபா நகர் சுடரொளி மன்ற 9-ம் ஆண்டு விழா; மாலை 6-30 மணிக்கு; தலைவர்: இரா நாராயணசாமி; பேசுவோர்: எஸ். பி. சற்குணம, மு. அதியமான்; வேதகுமார், கோவா தியாகி, வி. எம். சந்திரசேகரன்.

தஞ்சை

நகர தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு திலகர் திடலில்; தலைவர்: பி. மாணிக்கவாசகம் பி.ஏ.பி எல்.; பேசுவோர்: கி. மனோகரன் எம்.ஏ.,எம்.பி., வி. சேதுராமன் பி.ஏ.பி.எல்., எஸ். இராமலிங்கம் பி.ஏ.பி.எல்., மற்றும் பலர்.

மோகனூர்

தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு அழகிரி திடலில்; தலைவர்: வி. பரமசிவம்; பேசுவோர்: கே. எஸ். இராதாகிருஷ்ணன், இரா. மு. குருசாமி, எம். சுப்பிரமணியம், கே. வேலுசாமி, மற்றும் பலர்.

கோபி வட்டத்தில் அமைச்சர் செ. மாதவன் நிகழ்ச்சிகள்

சன. 21 காலை 9 மணி: பவானி சாகர் பவானி இல்லத்திலிருந்து மங்கலப்பட்டி புறப்படல்; பகல் 12 மணி: தெங்கு மராட்டா கூட்டுறவுப் பண்ணை வரவேற்பு; பிற்பகல் 3 மணி: தொப்பம்பாளையம் ஊராட்சிமன்ற வரவேற்பு; 3-30 மணி: கரிதொட்டம்பாளையம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மனைக்கட்டு வழங்கல்; மாலை 4 மணி: சத்தியமங்கலம் — கோவை மாவட்டக் கலெக்டர் தலைமையில் ஏழைகளுக்கு மனைக்கட்டு வழங்கல்; 4-30 மணி: சத்தி பேரூராட்சிமன்ற வரவேற்பு; 5 மணி: கொமரபாளையம் புதிய பள்ளி கட்டிடத் திறப்பு விழா; 5-[30] மணி: சதுமுகை ஊராட்சிமன்றக் கட்டிடத் திறப்புவிழா; 6 மணி: தாசப்பகவுண்டன் புதூர் தி. மு. க. பொதுக்கூட்டம்; இரவு 7 மணி: சத்தியமங்கலம் தி. மு. க. பொதுக்கூட்டம்; 9 மணி: கோபிசெட்டிபாளையம் தி. மு. க. பொதுக் கூட்டம்.